




# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

**தலைமைக் கழகம்**

**எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014**

**தொலைப்பேசி : 044 - 2848 1235**


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி : 24.09.2022

## தலைமைக் கழக செய்தி வெளியீடு

தமிழ்ப் பத்திரிகை உலகில் குறிப்பிடத்தகுந்த சாதனைகள் புரிந்தவரும், இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவராக இருந்து விளையாட்டுத்துறைக்கு முக்கிய பங்காற்றியவருமான மறைந்த 'தினத்தந்தி' அதிபர் **பத்மஸ்ரீ பா.சிவந்தி ஆதித்தனாரின்** பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி **கழக பொதுச்செயலாளர் திரு. டிடிவி தினகரன் அவர்களின் சார்பில்**, போயஸ் தோட்டத்தில் உள்ள **திரு.பா.சிவந்தி ஆதித்தனார்** அவர்களின் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த **திருவுருவ படத்திற்கு** கழக துணைப் பொதுச்செயலாளரும், தென்சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான **திரு.G.செந்தமிழன்**, கழக கொள்கை பரப்பு செயலாளரும், முன்னாள் சமூக நல வாரிய தலைவருமான **செல்வி.C.R.சரஸ்வதி**, கழக அமைப்பு செயலாளரும், மத்திய சென்னை மேற்கு மாவட்டக் கழக செயலாளருமான **திரு.V.சுகுமார்பாபு**, கழக அமைப்பு செயலாளர் **திரு.R.நேதாஜி கணேசன்,** கழக மீனவர் அணி செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான **திரு.T.ஆறுமுகம்,** மத்திய சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் **திரு.L.ராஜேந்திரன்**, வடசென்னை மத்திய மாவட்ட கழக செயலாளர் **திரு.A.R.பழனி,** கழக மாணவர் அணி துணைச்செயலாளர் **திரு.P சுரேஷ் (எ) அகரன்,** கழக சிறுபான்மையினர் நலப்பிரிவு இணைச்செயலாளர் **திரு.S.M.ஜோமணிபென்** ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**தலைமைக் கழகம்**

**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**



மேலும், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் அமைந்துள்ள அன்னாரது மணிமண்டபத்திலுள்ள திருவுருவச்சிலைக்கு கழக இளைஞர் பாசறை செயலாளர் திரு.V.மணிகண்டன், தூத்துக்குடி தெற்கு மாவட்ட கழக செயலாளர் திரு.P.R.மனோகரன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.




இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட/வார்டு, ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.

**தலைமைக் கழகம்**

**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**